**O.S.No.24/2016**

பி.வா.சா.1, திரு.சிவசங்கரகுமார்
நாள் :09.01.2024 நேரம் : 12.20 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்**

வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காலதாமதமாக மனு இல்லாமல் குறியீடு செய்ய இயலாது என்று ஆட்சேபனை தெரிவித்தார். அதற்கு பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஏற்கெனவே எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போதே ஆவணங்களின் விபரம் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதாலும், விசாரணையின்போது தாக்கல் செய்வதாக உறுதியளித்துள்ளதால் காலதாமத மனு தேவை இல்லை என்று குறிப்பிட்டார். மேற்கண்ட ஆட்சேபணையின் அடிப்படையில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1) சுப்பிரமணியன் மனைவி செல்லம்மாள் தன் கணவரின் ஓய்வு ஊதிய தொகை பெற்றதிற்கான பென்சன் பதிவேடு சான்றிட்ட நகல் பிவாசா.ஆ.10.

2) சுப்பிரமணியன் மனைவி செல்லம்மாள் தன் கணவரின் ஓய்வு ஊதிய தொகை பெற்றதிற்கான பென்சன் பதிவேடு வாரிசு விபரம் சான்றிட்ட நகல் பிவாசா.ஆ.11.

3) 25.02.2011ம் தேதி பிரதிவாதியால் தகவல் அறியும் சட்டப்படி முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் பிவாசா.ஆ.12.

வழக்கை தள்ளுபடி செய்ய வணக்கமாய் பிராத்திக்கிறேன்

(வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.30 P.M

சாட்சியின் கையொப்பம்.